தட்டிக்கேட்கிறோம். 'அஷ்யூரன்ஸ்' என்றால் தட்டிக்கேட்பது என்று அர்த்தம். அரசாங்கம் அதை நிறைவேற்றிவிட்டதா என்று கேட்பதாக அர்த்தம். அதை எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்கவேண்டும். சில நேரங்களில் அது முடியாமல போகலாம். பாராளுமன்றத்தில்கூட திரு. செழியன் அவர்களுக்கு பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி தலைவர் பதவி கொடுத்தார்கள். தோழமை கட்சி என்று இருந்தாலும் கொடுத்தார்கள். பொதுவாக, 'அன்டர்ஸ்டாண்டிங்' பேரில் தான் தருகிறீர்கள். எலெக்ஷன் என்று வைத்தால் எங்களுக்கு ஒரு சீட் கூட கிடைக்காது. அது தெரியும்.

We are only six. We are grateful to the ruling party for certain things.

நாங்கள் வற்புறுத்திக் கேட்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

(6) தன்னிலை விளக்கம்.

மதுரை டிரஷரி ஆபீசர் பற்றி திரு. சுப்பு கூறியது பற்றி—வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற 23—3—1973-ம் நாள் மாண்புமிகு கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே என்னைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். நான் அன்றைதினம் சபையில் இல்லாததால் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பு பேசுகிறபோது என்னுடைய உறவினர் ஒருவர் மதுரையில் டிரஷரி ஆபீசராக இருக்கிறார் என்றும், அவருக்கு நான் அதிகச் சலுகை காட்டியிருப்பதாகவும் இங்கே பேசியிருக்கிறார்கள். அதை ஒட்டி "அமைச்சர் அன்பிலின் உறுவினருக்குச் சலுகை, சுப்பு குற்றச்சாட்டு" என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. பொதுவாக அவர் சொல்லியிருக்கின்றார். திரு. ராமதாஸ் அவர்கள் உண்மையிலேயே என்னுடைய உறவினர் அல்ல. தெரிந்தவரும் அல்ல. எனக்குக் கிடைத்த விவரங்களிலிருந்து ஒன்று தெரிகிறது. அவர் மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்று தெரிகிறது. நண்பர் சுப்பு, அவர்கள் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்பதால் எனக்கு உறவினர் என்று சொல்லியிருந்தால், அவர்கள் அத்தனை பேரும் எனக்குச் சொந்தக்காரர்கள் என்ற பொருளில் சொல்லி இருந்தால் உண்மையிலேயே பெருமையோடு அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணு அவர்கள், முக்குலத்தோரை மாத்திரமல்ல எங்களை யெல்லாம் ஆளாக்குகிற நோக்தில் நாம் எல்லோரும் ஒரே தாயின் வயிற்றில் பிறப்பதற்கு, அந்தத் தாயின் வயிறு தாங்காது என்ற காரணத்தால் தனித் தனியே தாயின் வயிற்றில் பிறந்திருந்தாலும், நாமெல்லாம் ஒரேகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற குடும்ப பாசத்தை அரசியலில் வளர்த்தார்கள். அந்தப் பெருமை பேரறிஞர் அண்ணு அவர்களைத்தான் சாரும்.

அந்த வகையில் நான் பெருமையோடு அதை எடுத்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நண்பர் சுப்பு அவர்கள் ஏதோ அமைச்சர் அன்பில் அவர் களுக்கு உறவினர் என்று சொல்லி அவர் ஏதோ சலுகை பெற்றுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிருர்கள். இன்று அமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் கூட என்னிடத்தில் உறவினர்கள் என்று சொல்லி இருப்பதைப் பார்க்கிருேம்.

எனவே அவர் சாட்டியிருக்கின்ற குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவர் எனக்கு உறவினரும் அல்ல, சொந்தக்காரரும் அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். முக்குலத்தோரைச் சார்ந்தவர் என்ற முறையில் சொல்லியிருந்தால், பல பேர் இங்கேயே என் இனத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிருர்கள். அவர்களெல்லாம் என்னுடைய உறவினர் என்று கருதினுல், அண்ணு அவர்களின் தத்துவத்தின் படி சுப்பு அவர்களையும் உறவினராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர் சுட்டிக் காட்டியிருக்கும் அந்த நபருக்கும் எனக்கும் சொந்தமோ, பந்தமோ இல்லை என்பதை நான் இந்தச் சபைக்கு விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(7) அறிக்கை அளித்தல்.

ஆளுநர் பேருரையின்போது வெளிநடப்புச் செய்த சில உறுப்பினர்கள் மீதும், டாக்டர் எச். வி. ஹாண்டே, தென்னகம் நாளிதழ் அச்சிடுவோர், வெளியிடுபவர் ஆகியோர் மீது கொண்டுவரப்பட்டுள்ள வழக்குகள் மீதான அவையுரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கை.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru M. A. Latheef will now present the Reports of the Committee of Privileges on behalf of the Chairman.

THIRU M. A. LATHEEF: Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I present the Interim Reports on (i) the matter of privilege against certain Opposition Members who staged walk-out just before the Governor's Address on 2nd